Registered as a Newspaper

# உதயன்

புதன் பொய்கை

விலை ரூ. 50

பக்கங்கள் 16

சுடர் : 38
கதிர் : 18

புதன்கிழமை 14 டிசெம்பர் 2022

கார்த்திகை 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

நேற்றைய சர்வகட்சிக் கூட்டத்தில்

# ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆம் திருத்தத்துக்கு இணக்கம்

## அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்க ஜனவரி 31 வரை காலக்கெடு

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பில் எவரும் வாயே திறக்கவில்லை

யாழ்ப்பாணம், டிசெம்பர் 14

இலங்கையில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சிகள் அனைத்தும் இணக்கம் வெளியிட்டுள்ளன. குறிப்பாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாக வைத்து, ஒற்றையாட்சிக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் தீர்வை நோக்கிப் பயணிப்பதற்கு தென்னிலங்கை சிங்களக் கட்சிகள் பச்சைக்கொடி காட்டியுள்ளன. அத்துடன், காணிப்பிரச்சினை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விவகாரங்களுக்கு உடனடித் தீர்வைக் காணவும் சாதக சமிக்ஞைகள் வெளியிடப்பட்டுள்ளன.

»15

# காணாமல் ஆக்கப்பட்டோரை கொலை செய்துவிட்டீர்கள்!!!

## அது எமக்குத் தெரியும்: அவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்கிறார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், டிசெ. 14

காணாமல் ஆக்கப்பட்டோரை நீங்கள் கொலை செய்துவிட்டீர்கள் என்பது எமக்குத் தெரியும். அவர்கள் கொலை செய்யப்பட்டமைக்கு நீதி - நியாயம் கிடைக்கவேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட

»15

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில்

# நடனத்துறை தெரிவுப் பரீட்சை: முறைகேடு என முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் நடனத்துறைக்குப் புதிய மாணவர்களை உள்வாங்குவதற்காக நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று, நுண்கலைப்பாடங்களில் விசேட திறமை

»15











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையை தீர்க்க இதுவே சிறந்த காலகட்டம்!

## ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு

கொழும்பு, டிசெ.14

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு இதுவே சிறந்தகாலகட்டம். இது விடயத்தில் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் சரியான நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தேடும் முயற்சியை சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணியே கடந்த காலங்களில் குழப்பி வந்தது. நான் 13 பிளஸ் எனக் கூறியபோது, அதை மஹிந்த எதிர்த்தார். ஆனால் இன்று மஹிந்த ராஜபக்சவைக்கூட 13 பிளஸ் என்ற நிலைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்துள்ளார். இது சிறந்த மாற்றமாகும். அதனை பயன்படுத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடவேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அன்று முதல் நான் இருந்து வருகின்றேன். இனியும் இந்த நிலைப்பாடு மாறப்போவதில்லை. வாக்கு வேட்டைக்காக கொள்கைகளை விட்டுக்கொடுக்க முடியாது. அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொருளாதார நெருக்கடியை சமாளித்த அனுபவம் உள்ளது. 2002 ஆம் ஆண்டில் சரிவில் இருந்த பொருளாதாரத்தை அவர் மீட்டார் - என்றார். (எ-44)

## புலனாய்வுத் தகவல்களை வெளிப்படுத்த முடியாது!

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14



நாட்டில் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு சேவைகள் குறித்த தகவல்களை தேசிய பாதுகாப்பு பேரவைக்கு மாத்திரமே தெரிவிக்கமுடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன கூறினார்.

இந்தியாவின் வெளிநாட்டு புலனாய்வு முகவர் அமைப்பான 'றோ' தலைவரின் இலங்கை விஜயம் குறித்து அமைச்சரவை வாராந்த மாநாட்டில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். நாட்டின் தலைவர் என்ற அடிப்படையில் பல குழுக்களை சேர்ந்த அதிகாரிகள் என்னை சந்தித்து பேச்சில் ஈடுபடுவர். அது குறித்து நான் உரியவர்களுக்கே தகவல் வழங்குவேன் என ஜனாதிபதி கூறினார் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## மழைக்கு வாய்ப்பு

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புத்தளத்தில் இருந்து மன்னார், காங்கேசன்துறை மற்றும் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழைபெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென் மேற்கு முதல் தென்கிழக்கு வரையான திசைகளில் இருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்றுள்ளது. (ம)

## 5 வங்கிகளுக்கு அபராதம்!

கொழும்பு, டிசெ. 14

இலங்கையிலுள்ள 5 வங்கிகளுக்கு எதிராக இலங்கை மத்திய வங்கி அபராதம் விதித்துள்ளது. இந்த வங்கிகள் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதி பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டவிதிகளுக்கு இணங்காதமைக்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)

## பௌத்த பல்கலையில் பாலியல் வன்முறை

### பாதிக்கப்பட்ட மாணவ பிக்குகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 14

கொழும்பு ஹோமாகம பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தில் பாலியல் வன்முறை இடம்பெற்றுள்ளது என்று பாதிக்கப்பட்ட மாணவ பிக்குகள் மூவர் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அபய என்ற சித்திரவதை அறையில் வைத்து கொடூரமான தாக்குதல் நடத்தி ஆடைகளைக் களைந்து பாலியல் வன்கொடுமை செய்தமை மற்றும் மனிதாபிமானமற்ற சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியமை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் இரண்டு இடதுசாரி அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய சிரேஷ்ட மாணவர்கள் குழுவொன்று தொடர்ந்து குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,இ)

## மாநகரசபைகளாக மாறவுள்ள அம்பாறையும், மன்னாரும்

கொழும்பு, டிசெ. 14

அம்பாறை மற்றும் மன்னார் மாநகரசபைகளை மாநகர சபைகளாக தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அபிவிருத்தி பணிகளை இலகுபடுத்துவதற்காக இந்த இரு நகரசபைகளும் மாநகர சபைகளாக தரமுயர்த்தப்படவுள்ளன. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், அலுவலக வசதிகள், மனித வளங்களை பயன்படுத்தி மேலதிக நிதியை செலவிடாமல் ஒருசில மாவட்டங்களின் நகரங்களை மாநகரங்களாக தரமுயர்த்தும் நோக்குடன் இந்த அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## தேர்தலுக்கு பிரதிநிதிகளையும் தயார்ப்படுத்துகிறது அரகலய!

கொழும்பு, டிசெ. 14

உள்ளூராட்சித் தேர்தலுக்கு இளம் தலைவர்களைத் தயார்ப்படுத்துவதற்காக கொழும்பு காலிமுகத்திடல் அரகலய போராட்டக்காரர்கள், 'அரகலய எக்ஸ்கோர்' என்ற அமைப்பை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உருவாக்கியுள்ளனர்.

இந்த அமைப்பு அரசியலில் இளம் தலைவர்களை வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டது. இது ஒரு அரசியல் கட்சி அல்ல, ஆனால் இது சாத்தியமான வேட்பாளர்களை வெளியே கொண்டு வருவதற்கான ஓர் இயக்கம் என்று அரகலய எக்ஸ்கோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நிபுன் தாரக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலுக்குள், அரகலய எக்ஸ்கோர் அமைப்பிலிருந்து இளம் பிரதிநிதிகள் தயார்ப்படுத்தப்படுவர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-14,இ)

## வசந்த முதலிகே விளக்கமறியலில்

கொழும்பு, டிசெ. 14

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே அடுத்த வருடம் ஜனவரி 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சந்தேகநபருக்கு எதிராக தொகுக்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கத்தை அன்று நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வசந்த முதலிகே நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே அவருக்கு இவ்வாறு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## ஜனாதிபதித் தேர்தலில் பெரமுன கட்சியுடைய வேட்பாளராக ரணில்?

### பஸில் நழுவல் பதில்

யாழ்ப்பாணம், டிசெ. 14

ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவின் வேட்பாளராக ரணில் போட்டியிடப் போகின்றாரா? என்ற கேள்விக்கு நேரடியாகப் பதில் வழங்காமல் நழுவியிருக்கின்றார் பஸில்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, ஜனாதிபதித் தேர்தல் குறித்து இன்னமும் சிந்திக்கவில்லை. பொருளாதாரப் பிரச்சினை பற்றியே தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரசியல் கட்சி என்ற அடிப்படையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலையே நாம் எதிர்பார்க்கின்றோம் என்று பஸில் தெரிவித்துள்ளார். (ச-44)

## இந்தியக் கடற்தளபதி இலங்கைக்கு வருகை

கொழும்பு, டிசெ. 14


இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் ஹரிக்குமார் 4 நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கை வந்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையிலான கடல்சார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் அவர் வருகை தந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைத் துறைமுகத்தில் சீனக் கப்பல் தரித்து நின்றமை காரணமாக இராஜதந்திர நெருக்கடி உருவாகி 4 மாதங்களின் பின்னர் இந்த வருகை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் பரவலாக நெற்களில் மடிச்சுக்கட்டி!

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து



கிளிநொச்சி, டிசெ. 14

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்கதிர்களில் மடிச்சுக்கட்டி நோய்த் தாக்கம் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவித்ததாவது:-

இம்முறை பெரும்போக பயிற்செய்கையை அனைத்து விவசாயிகளும் கடும் சவால்களுக்கு மத்தியிலேயே மேற்கொண்டுள்ளோம். உரப்பற்றாக்குறை காரணமாக கடும் விலைகளைக் கொடுத்தே இம்முறை உரத்தைக் கொள்வனவு செய்துள்ளோம். கிருமி நாசினிகளுக்காகவும் பெருந்தொகை பணத்தைச் செலவழித்துள்ளோம். ஆனால், எமது பணமும் முயற்சியும் இம்முறை வீணாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. மடிச்சுக்கட்டி நோயின் தாக்கம் இம்முறை பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு உரிய தீர்வை வழங்கி எமது பயிர்களைக் காப்பாற்ற வேண்டும் - என்றனர். (ம-113)

# பதுங்கு குழிகளால் டெங்குத் தொற்று!

## உடனடியாக அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 14

முல்லைத்தீவு மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் பதுங்கு குழிகளாலும், மண் அணைகளாலும் டெங்குத் தொற்று தீவிரமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2009ஆம் ஆண்டு இறுதிப்போர் இடம்பெற்ற காலப்பகுதிகளில் குறித்த பகுதிகளில் பதுங்கு குழிகளும், மண் அணைகளும் அமைக்கப்பட்டன. போர் முடிந்து ஒரு தசாப்தம் கடந்த பின்னரும் அந்த மண் அணைகள் அகற்றப்படவில்லை. இதனால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றது. அத்துடன் பதுங்கு குழிகளுக்குள்ளும் மழை நீர் தேங்கி டெங்குத் தொற்று தீவிரமாகப் பரவக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது. எனவே அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரவேண்டும் என்று மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-13)

### பெண் தலைமைத்துவக் குடும்பத்தின்

# வாழ்வாதாரத்தைப் பறித்த மண்டோஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 14

மண்டோஸ் புயலின் தாக்கத்தால் ஏற்பட்ட கடும் குளிரால், மூளாய் பொன்னொளிநகர் பகுதியில் பெண் தலைமைத்துவக் குடும்பமொன்று தனது வாழ்வாதாரத்துக்காக வளர்ந்து வந்த மாடொன்று உயிரிழந்துள்ளது.

குறித்த குடும்பத்தின் வாழ்வாதாரத்துக்காக அரச சார்பற்ற நிறுவனமொன்றால் கறவை மாடொன்று அண்மையில் வழங்கப்பட்டது. கடும் குளிரால் குறித்த மாடு இறந்ததை அடுத்து அந்தக் குடும்பம் வாழ்வாதாரத்துக்கு நிர்க்கதியாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பெண் தலைமைக் குடும்பங்கள் பலவற்றுக்கு வாழ்வாதாரத்துக்காக கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் புலம்பெயர் உறவுகளாலும் அண்மைக்காலமாக வழங்கப்பட்ட நிலையில், அவற்றில் பல குடும்பங்கள் இவ்வாறு தமது வாழ்வாதாரத்தை இழந்திருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பிரதேசசபை சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல்

முல்லைத்தீவு, டிசெ. 14

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஒலுமடு உப அலுவலகத்தில் பணிபுரியும் உழவியந்திர சாரதி மீது, இனந்தெரியாத குழுவொன்று வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தச் சம்பவம் முறிகண்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-19)




# ஊழியர் மீது தாக்குதல்: கண்டித்துக் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் சிற்றூழியர் ஒருவர் மீது நேற்றுமுன்தினம் வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், இந்தத் தாக்குதலைக் கண்டித்து நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலை மேற்கொண்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதுடன் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஊழியர்கள் சார்பில் பிரதேசசபை தவிசாளரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ம-19)

# யாழ்.மாவட்டத்தில் காற்றுமாசு உயர்வு

## காற்றின் தரக் கண்காணிப்பு பிரிவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

காற்றின் தரச் சுட்டெண்ணின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் காற்று மாசுபாடு அதிகரித்துக் காணப்படுகிறது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் காற்று தரக் கண்காணிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் காற்றின் தரச் சுட்டெண் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தரவுகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் காற்று தரக் கண்காணிப்பு பிரிவு நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டது. இதிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# துப்பாக்கிகள், வெடிபொருள்களுடன் கண்டாவளையில் ஒருவர் கைதானார்

கிளிநொச்சி, டிசெ. 14

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை கோணங்குளம் பகுதியில் துப்பாக்கிகளுடன் 31 வயதான இளைஞர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த தகவலையடுத்து சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் வன உயிரிகள் திணைக்களத்தினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையிலேயே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 3 இடியன் துப்பாக்கிகள், 11 கட்டுத் துப்பாக்கிகள், 250 ரி56 ரக துப்பாக்கித் தோட்டாக்கள், 8 ஈய குண்டுகள், பட்டாசு வெடிகள் என்பனவும் 8 கிலோ பண்டி இறைச்சியும் மீட்கப்பட்டுள்ளன.



சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-14-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிள்ளையார் கதை**

மூவேழு நாள்களாய் விருப்புடனே நோற்குமெம்மை
பாராது இருப்பதுமேன் கணநாதா – ஓர்விழியால்
எமைப்பார்த்தால் போதுமையா! எம்வாழ்வு மலருமையா!
ஏரம்பா உன்னருளைப் பொழி

-முருகு

அத்துமீறிய மீன்பிடி

# 24 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

யாழ்ப்பாணம், டிசெ. 14


யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த 24 இந்திய மீனவர்களும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மேற்படி 24 மீனவர்களும் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களின் படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. இவர்கள் மீதான வழக்கின் விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் செ. கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்படி 24 மீனவர்களுக்கும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து விடுவிக்கப்பட்டனர்.

பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் ஐந்து படகுகளைத் தொடர்ந்தும் தடுத்து வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டதுடன் குறித்த படகுகளுக்கான உரிமைகோரல் வழக்கினை எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டார். (ம-20)

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் ஏற்படலாம். நண்பர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.



**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். நினைத்த காரியங்கள் நிறைவேறும்.



**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கவனமாக இருக்கவும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும்.



**கடகம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். மனவருத்தங்கள் நீங்கும். செலவுகளை சமாளிப்பதில் சிரமம் ஏற்படும்.



**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கக் கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.



**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். பிள்ளைகள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.



**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகும்.



**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். பொறுமையைக் கடைப் பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். கவனமாக இருக்கவும்.



**தனுசு:** புதிய முயற்சிகளை தவிர்த்து விடவும். அவ்வப்போது சற்று சோர்வு உண்டாகும். குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகள் சாதகமாகும்.



**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். வியாபாரத்தில்லாபம் கூடுதலாகக் கிடைக்கும். பைரவர் வழிபாடு நலம் சேர்க்கும்.



**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும்.



**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது.

## ஆடுகளைத் திருடிய சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர்ப் பகுதியில் நான்கு ஆடுகளைத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ம-14,125)

## கோடாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 14

சுன்னாகம் பகுதியில் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 40 லீற்றர் கோடா மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-14,125)

## திருட்டில் ஈடுபட்ட தம்பதியர் கைது!



யாழ்ப்பாணம், டிசெ. 14

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளலாய் பகுதியிலுள்ள மீன்பிடி உபகரணங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தை உடைத்து பெறுமதியான வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் தம்பதியர் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த திருட்டு தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டு வெறும் 24 மணிநேரத்துக்குள் பொலிஸார் சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு 27 மற்றும் 30 வயது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருடியதாக கூறப்படும் ஒரு லட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் மற்றும் இதர மீன்பிடி உபகரணங்கள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-23)

## இளவாலையில் கஞ்சாவுடன் திருடன் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 14

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயரப்புலம் பகுதியில் இடம்பெற்ற தங்கநகைத் திருட்டுத் தொடர்பில் தேடப்பட்ட சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டார்.

25 வயதான குறித்த சந்தேகநபரிடம் இருந்து திருடப்பட்டதாகச் சொல்லப்படும் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபருக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ம-27)

## வீட்டுக்குள் நுழைந்து இரும்புகள் திருட்டு!

யாழ்ப்பாணம், டிசெ. 14

பழைய இரும்புகளைத் திருடிய சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தூர் கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த குறித்த நபர்கள் பழைய இரும்புகளைத் திருடி விற்பனை செய்துள்ளனர். இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து சிறுப்பிட்டி, புத்தூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 21, 22 வயதுடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் திருடப்பட்ட பழைய இரும்புப் பொருள்களும் சந்தேகநபர்களிடமிருந்து மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14,23)

## சைக்கிள் திருத்தகத்தை உடைத்து பெறுமதியான பொருள்கள் திருட்டு!!

யாழ்ப்பாணம், டிசெ. 14

அச்சுவேலி மேற்கு பகுதியில் துவிச்சக்கர வண்டி திருத்தும் நிலையம் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன என்று பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுளள்து.

கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மீட்சிக்கு என்ன வழி?

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் இலங்கைக்கு விரைவில் கிடைக்கும் என்று அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டு வரும் நிலையில், அதற்கு மாறாக சர்வதேச மட்டத்தில் இலங்கையின் பொருளாதாரநிலை, நாளுக்குநாள் தரமிறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதன் தாக்கங்கள் நாட்டின் சாதாரண மக்கள் தலையிலேயே எதிர்வரும் நாள்களில் இறங்கும் என்பது திண்ணம்.

இலங்கையின் பொருளாதார நிலைமை ''பிட்ச் ரேற்றிங்'' நிறுவனத்தின் தரப்படுத்தலில் மீண்டும் தரமிறக்கப்பட்டிருக்கின்றது. டிசெம்பர் மாதம் கிடைக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகள் இன்னமும் கிட்டவில்லை. அந்த உதவிகள் எப்போது கிடைக்கும் என்பது தெரியாது. இந்தக் கடனுதவி ஜனவரி மாதத்தில் கிடைக்கும் என்பது அரசாங்கத்தின் பிந்திய நம்பிக்கை. ஆனால், அதற்கான உறுதிப்பாடுகள் எவையும் அரசாங்கத்திடம் இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் எதிர்வரும் மாதங்களில் கிடைக்காவிட்டால் இலங்கையின் நிலைமை இன்னும் மோசமாகமாறிவிடும்என்பதுநிபுணர்களின் முன்னெச்சரிக்கை. இந்தக் கடனுதவி உடனடியாகக் கிடைக்காவிட்டால் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் கையேந்தினால் மட்டுமே அரச நிர்வாகத்தைக் கொண்டு செல்ல முடியும் என்கின்ற இக்கட்டு நிலைமையே மிச்சமாக இருக்கின்றது.


நாட்டின் நிலைமை இவ்வாறு இருக்க, அரசியல்வாதிகளிடத்தில் அது தொடர்பான எந்தப் பிரக்ஞையும் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போதும் ராஜபக்ச குடும்பத்துக்கு முண்டு கொடுப்பதிலும், வெட்டி அரசியல் பீற்றல்களைப் பேசுவதிலுமே அவர்கள் அதிகம் ஆர்வம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. தேர்தல் கூட்டணிகளும், பேரம் பேசல்களுமே அரசியலில் முன்னிறுத்தப்பட்டிருக்கின்றன. நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் தொடர்பிலோ, நாட்டைக்கட்டியெழுப்ப வேண்டிய மாற்றங்கள் தொடர்பிலோ எவருமே அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

மாற்றத்தை விரும்பி வீதிக்கு இறங்கிப் போராடிய மக்கள் அரசியல் தந்திரங்களால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். மீண்டும் வீதிக்கு இறங்கிப் போராட முடியாதவாறு நாட்டின் பொருளாதார நிலைமை அவர்களைக் கட்டிப் போட்டிருக்கின்றது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் தங்கள் தந்திரங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர். கட்சி நலன்சார்ந்தும், குடும்ப நலன் சார்ந்துமே அரசியல் நிலைப்பாடுகள் எடுக்கப்படுகின்றன. பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் ஒரு நாட்டில் இவ்வாறான அரசியல் நிலைமை காணப்படுவது நாட்டின் மீட்சிக்கான தடைக்கல்லாகவே இருக்கும்.

தேர்தல் என்ற பேச்சு நாட்டில் வலுப்பெற்றிருக்கும் நிலையில், அவ்வாறு தேர்தல் நடத்தப்பட்டால் அது மக்களுக்குக் கிடைக்கும் ஒரு துருப்புச் சீட்டாகவே இருக்கும். மக்கள் ஏனெனில் அவர்கள் விரும்பும் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான – நாட்டை அழிவில் இருந்து மீட்பதற்கான – இறுதிச் சந்தர்ப்பமாகவும் அது இருக்கும். மாற்றத்துக்கான மக்களின் போராட்டம் ஒடுக்கப்பட்டுள்ள நிலையில், மக்களைத்திரட்டி போராட்டங்களைமுன்னெடுத்தவர்கள் இப்போது செய்ய வேண்டியது சுய விருப்பு வெறுப்புக்களைக் களைந்து எதிர்காலச் சந்ததிக்காக ஒன்றுபட வேண்டியதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதே, மாற்றத்துக்கும் மீட்சிக்கும் அதுவே வழி.

### நாளொரு நல்வார்த்தை

" எதிர்காலம் எவ்வாறு இருக்குமென நமக்குத் தெரியாது. ஆனால் நம் நோக்கங்களே எதிர்காலத்தை உருவாக்குகின்றன" - பட்லர் ஹ்யூம்




# ஒற்றையாட்சி முறைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு

## அதில் பெரமுன உறுதியென பஸில் ராஜபக்ஸ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

13 பிளஸ் யோசனையால் இலங்கையின் ஒற்றையாட்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்ளேயே நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும் என்பதில் பெரமுன உறுதியாக இருக்கின்றது என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்து ஜனாதிபதி தமிழ்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார். எல்லைமீறிய அதிகாரப் பகிர்வை எதிர்ப்பீர்களா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றையாட்சி முறைமையையே பெரமுன கட்சி ஏற்கின்றது. 13 பிளஸ் என்ற யோசனையை மஹிந்த ராஜபக்சவே முதன் முதலில் முன்வைத்தார். அதன்மூலம் நாட்டின் ஒற்றையாட்சி உறுதிப்படுத்தப்பட்டது. சொல்லளவில் இருந்த ஒற்றையாட்சியை மஹிந்த ராஜபக்சவே நிஜமாக்கினார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு தற்போது உள்ளவாறு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மக்களின் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். பெரமுனவைப் பலவீனப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எந்தவிதத்திலும் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது. பெனமுனவைப் பலவீனப்படுத்துவதற்கு ஜனாதிபதி துணை நிற்கமாட்டார்- என்றார். (ச-44)

# ஜனாதிபதித் தேர்தலை நடத்த ரணில் வியூகம்!

கொழும்பு, டிசெ. 14

உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்பாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வியூகம் வகுத்துள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அறிய முடிகின்றது.

எதிர்க்கட்சியில் ரணிலுக்கு நிகரான பொருளாதார நிபுணத்துவமுடைய அரசியல் முதிர்ச்சியுடைய ஒரு வேட்பாளர் இல்லாததால் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தி வெற்றிபெறலாம் எனும் நோக்கில் ரணில் காய் நகர்த்துகிறார். இதற்கான நடவடிக்கைகளையும் அதன் சாதகத்தனங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்.

மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட முக்கியமான சகாக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விவகாரம் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது எனவும் இந்தத் தீர்மானத்துக்கு மஹிந்த ராஜபக்ச பூரண ஆதரவு வழங்க இருக்கிறார் எனவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ச-22)

**நாளை**

15.12.2022
வியாழக்கிழமை
கார்த்திகை 29

சுபநேரம் : 07.51 - 09.21
ராகுகாலம் : 01.51 -03.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் அதிகரிக்கின்றன குடும்ப வன்முறைச் சம்பவங்கள்!

முல்லைத்தீவு, டிசெ.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.விஜயந்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிவரும் சிவில் பெண்கள் அமைப்பு மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த ஆண்டு 500க்கும் மேற்பட்ட குடும்ப வன்முறை முறைப்பாடுகள் பிரதேச செயலகங்களில் பதிவாகின்றன.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் கிராம மட்டங்களில் இறங்கி வேலை செய்வதால் அவர்கள் ஊடாக நேரடியாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. பிரதேச செயலகம் ஊடான உள வளத்துணை மூலம் சில பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

தீர்க்கமுடியாத சில பிரச்சினைகளை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்கின்றோம்.

இந்த ஆண்டு 160க்கும் மேற்பட்ட குடும்ப வன்முறை முறைப்பாடுகள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பதிவாகியுள்ளன. இன்னும் எத்தனையோ சம்பவங்கள் வெளியில் வராமல் இருக்கின்றது பாதிக்கப்பட்ட பெண்கள் பொலிஸ் நிலையம் செல்வதை விட பிரதேச செயலகங்களுக்கு வருவது அதிகரித்துச் செல்கின்றது. இது பெரும் சவாலாக இருக்கின்றது. அதே நேரம், இளவயது திருமணங்கள் அதிகளவில் பதிவாகின்றன.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 20 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இளவயதுக் கர்ப்பம், இளவயது கருக்கலைப்பு போன்ற முறைப்பாடுகளே அதிகம் பதிவாகின்றன. இவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம் - என்றார். (எ-19)

பரீட்சைகளில் சித்தியடையாத

# மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி

கொழும்பு, டிசெ. 14

வெளியாகிய க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வி வாய்ப்பை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 23ஆம் திகதி வெளியிடப்படும் என தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் தெரிவித்தது. 50 பாடநெறிகளுக்காக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதி தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஜனவரி 23ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியுமென தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (ச-இ)



மன்னார் றோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில் தலைமன்னார் கடற்கரையோரப் பகுதிகள் அண்மையில் தூய்மைப்படுத்தப்பட்டன. பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலர் இதில் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர். (ம-213)



# கௌதாரிமுனையில் இருந்து கால்நடைகளை அகற்றுங்கள்

## பூநகரி பிரதேசசபை தவிசாளர் வேண்டுகோள்

கிளிநொச்சி, டிசெ. 14

பூநகரி - கௌதாரிமுனையில் உள்ள கால்நடைகளை வெளியேற்றுவதற்கு உரிமையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

கௌதாரிமுனை கிராமம் மேய்ச்சல் தரவைக்குரிய நிலம் அல்ல. ஆனால் கோணாவில் பகுதியைச் சேர்ந்த கால்நடை உரிமையாளர், பெருமளவு கால்நடைகளை கௌதாரிமுனையில் மேய்ச்சலுக்கு விட்டுள்ளார்.

இதன் காரணமாக கௌதாரிமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பெருமளவு நெற்பயிர்ச்செய்கை அழிவடைகின்றது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பிரதேசசபை என்ற வகையில் கௌதாரிமுனையில் இருந்து கால்நடைகளை பொருத்தமான இடங்களுக்குக் கொண்டு செல்லுங்கள் என்று கௌதாரிமுனைக்கு நேரடியாகச் சென்று கால்நடை உரிமையாளரிடம் அறிவித்துள்ளோம். எனினும் உரிமையாளர் கால்நடைகளை வேறு இடங்களுக்கு மாற்றாததால் கௌதாரிமுனை விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். கௌதாரிமுனை கிராமம் கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஈடுபடுத்துவதற்கு பொருத்தமற்ற கிராமமாகும்.

எனவே, கால்நடைகளின் உரிமையாளர் உடனே கால்நடைகளை கௌதாரிமுனையிலிருந்து வேறு இடத்துக்குக்கொண்டு செல்ல வேண்டும் - என்றார். (எ-14-13)

# கடும் மழையை அடுத்து டெங்குத் தொற்று தீவிரம்!

சாவகச்சேரி, டிசெ.14

அண்மைய மழையை அடுத்து சாவகச்சேரி நகரம் மற்றும் மட்டுவில், எழுதுமட்டுவாழ் ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த இரு தினங்களில் பத்து பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டிசெம்பர் மாதத்தில் ஏற்கனவே மட்டுவில், நாவற்குழி, கைதடி, மந்துவில், கொடிகாமம், எழுதுமட்டுவாழ், சாவகச்சேரி நகரம் ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளைச் சேர்ந்த 12 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர்.

மழை வெள்ளம், பிரதேசத்தின் பல இடங்களில் காணப்படுவதால் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை பிரதேசத்தில் உண்ணிக் காய்ச்சலுக்கு ஆளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. வயல் வேலைகள் மற்றும் பற்றைகள் துப்புரவு செய்வோர் வேலைகள் முடிந்து வீடுகளுக்குச் செல்லும் முன்னர் குளித்து வேறு ஆடை அணிந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-9)

# காற்றால் அழிந்த வாழைகளுக்கு நிவாரணம் கோரும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 14

மண்டோஸ் புயல் தாக்கத்தால் அழிவடைந்த வாழைகளுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று வாழைச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மண்டோஸ் புயலால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல இடங்களில் வாழை, தென்னை, பனை எனப் பயன்தரும் பல மரங்கள் அழிவடைந்தன. வலி.கிழக்கில் பெருமளவில் வாழைச்செய்கைகள் அழிவடைந்தன.

மண்டோஸ் புயலால் ஏற்பட்ட இந்த அழிவுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு நிவாரணத்தைப் பெற்று வழங்கி உதவ வேண்டும் என்று செய்கையாளர்கள் கவலையுடன் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14-17)

# குளிரால் உயிரிழந்த மாடுகள்

தென்மராட்சி, டிசெ.14

கடும் குளிர் காரணமாக தென்மராட்சி வரணி வடக்குப் பகுதியில் உள்ள பண்ணையொன்றில் 8 மாடுகள் உயிரிழந்துள்ளன எனவும் மூன்று மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

வரணி வடக்கு வீதிசாலைக்கு முன்பாக உள்ள பண்ணையில் கட்டப்பட்டிருந்த மாடுகளே உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதன் பெய்கை



“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.” -வள்ளுவர்



# தமிழர்கள் பண்பாட்டைப் பிரதிபலித்து


# வவுனியா பிரதேச கலாசாரவிழா


■ பா.குமுதன்

பண்பாடு, கலாசாரம் என்பது மக்களின் வாழ்வியல் முறையையும், அவர்களின் தனிப்பட்ட பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் உள்ளடக்கியது.
இவையாவும் அந்தச் சமூகத்தின் குறிக்கோள்கள் மற்றும் தேவைகள் அடிப்படையில் தோன்றியனவாகும். ஒவ்வொரு சமூகமும் தனக்கெனச் சில தனித்த மரபுகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். மரபுகள் மாறுபட்டாலும் அவை ஒவ்வொரு சமூகங்களது சிறப்பியல்புகளைச் சுட்டுவதால் மனிதசமுதாயம் அவற்றை இன்றும் போற்றிப் பாதுகாத்து வருகின்றது. அந்தக் கட்டமைப்பில் அவர்களால் கடைப்பிடிக்கப்படும் கலாசார, பண்பாட்டு விழுமியங்களை, வெளிப்படுத்தும் விதமாகக் கொண்டாடப்படும் விழாக்கள் முக்கியமாகப் பங்காற்றுகின்றன. அது அந்த மக்களின் வளர்ச்சிப்போக்கு, வீழ்ச்சி, மறுமலர்ச்சி, இருப்பு ஆகியவற்றையும் புலப்படுத்துவதாகவுள்ளன.
அந்தவகையில் பிரதேசங்கள் தங்களுக்குரிய கலை, கலாசாரப் பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்தும் விதமாக வடக்குமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வவுனியா பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப்பேரவையும் இணைந்து நடத்திய வவுனியா 'பிரதேச கலாசாரவிழா' அண்மையில் இடம்பெற்றது.
பிரதேச செயலர் நா.கமலதாசன் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைகழக ஓய்வுநிலை பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார். வலயகல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா, கலாபூஷணம் கனகசபை கோபாலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். மங்கள இசை முழங்க விருந்தினர்கள், மற்றும் கலைஞர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன் தமிழ்தாய் வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வுக்கான தலைமை உரையை தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்த வரவேற்புரையை உதவிப் பிரதேச செயலர் ச.பிரியதர்சினி வழங்கினார், வரவேற்பு நடனத்தை நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கியிருந்தனர்.
மண்டபத்தில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் சிதம்பரேஸ்வரம் நடனாலயத்தின் கரகம், பரதநர்த்தனா கலைமன்றம் வழங்கிய கோலாட்டம், கிராமியஇசை, நிருத்திய ஸ்ருதி நாட்டிய கலாமன்றத்தின் நடனம் போன்றவை நிகழ்வை செம்மையாக்கி மெருகூட்டியது. தொடர்ச்சியாக வவுனியா பிரதேசத்தின் மொழி, கலை, கலாசாரம், இயல்,இசை நாடகத்துறையில் பங்களிப்புச் செய்தவர்களுக்கான 'கலாநேத்ரா' விருதும் வழங்கிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வவுனியா மண்சார்ந்த மரபுகளை உள்ளடக்கிய 'வவுனியம் 6' கலை இலக்கிய பண்பாட்டு மலர் வெளியிடப்பட்டது. நூலுக்கான வெளியீட்டுரையை உபபீடாதிபதி பொன்னையா சத்தியநாதன் வழங்க, ஆய்வுரையை ஓய்வுநிலை ஆசிரியர் சகுந்தலா தேவி சந்திரகுமார் வழங்கினார்.











வடக்கு மாகாண இறைவரி ஆணையாளர் பந்துல ஹப்புதந்திரிகே எழுதிய 'முத்திரை வரி நடைமுறைகள்' என்ற நூல் கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை யு.எஸ். விருந்தினர் விடுதியில் வெளியிடப்பட்டது.
இந்த நூலை தமிழில் அவர் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மண்ணில் இன்று ஆறுமுகநாவலர் மாநாடு



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்து 200ஆவது ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ். மாநகரசபை சமய விவகாரக் குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் ஆறுமுகநாவலர் மாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்று ஆரம்பமாகும் இந்த மாநாடு எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் நல்லூர்ப் பதியிலே நாவலர் மணிமண்டபம், நாவலர் கலாசார மண்டபம், ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது. ஆன்மிக அரங்கு, பொது அரங்கு, ஆய்வரங்கு எனப் பல்துறை சார்ந்ததாக இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

### ஆன்மிக அரங்கு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலே ஆன்மிக அரங்கின் தொடக்க நிகழ்வுகள் இன்று காலை 7.30 மணிக்கு குருபூஜை நிகழ்வுகளோடு ஆரம்பமாகவுள்ளன. அதனைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் வரலாற்றைச் சித்திரிக்கின்ற ஓவியங்களும் நாவலர் பெருமானால் எம் சமூகத்துக்குத் தரப்பட்ட படைப்புகளும் உள்ளடங்கிய கண்காட்சி நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவமும் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு நாவலர் பெருமானின் திருவுருவப் படம் தாங்கிய திருவூர்வல நிகழ்வு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலிருந்து நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் நோக்கிப் பவனிவரவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்திலே, பெயர்ப் பலகைத் திரை நீக்கத்தினைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுக்கான குருபூஜை நிகழ்வுகளோடு ஆன்மிக அரங்கின் அரங்க நிகழ்வுகள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் முன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில், யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

### நிகழ்வுகள்

நல்லூர், ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்திலே, ஐந்து நாள்கள் மாலை நேர நிகழ்வுகளாகப் பொது அரங்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு நிகழ்வின் கருத்தரங்கம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் 15, 16, 17ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. கருத்தரங்கத்தின் முதலாம் நாள் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகைசார் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தொடக்கவுரையினை யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் நிகழ்த்த சைவப்பணியில் நாவலர் என்னும் தலைப்பிலான கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் கருத்தரங்கு யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நாவலரின் தமிழ்ப் பணி என்னும் தலைப்பிலான கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. கருத்தரங்கின் நிறைவு நாள் வைபவம் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸின் தலைமையில் நாவலரின் சமூகப் பணி என்னும் தலைப்பிலான கருத்துரைகள் இடம்பெறவுள்ளன.

### விருதும் விசேட கௌரவமும்

நாவலர் ஆண்டிலே நடைபெறும் இந்த மாநாட்டு நிகழ்விலே துறை சார்ந்த ரீதியில் கம்பவாரிதி இ.ஜெயராஜ், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், வைத்திய கலாநிதி இ.லம்போதரன், உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் ஆகியோருக்கு நாவலர் புகழ் விருதும் - ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் இந்தியா, தமிழ் நாட்டைச் சேர்ந்த மருத்துவர் ந.இராமசுப்பிரமணியன், மருத்துவர் சு.அருள்மொழிச்செல்வன் ஆகியோர் நாவலர் புகழ் விசேட கௌரவம் மூலம் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஏற்பாட்டுக்குழு

# Tantalize 2022:
# இலங்கையின் பல்கலைக்கழக திறமைக்கான தேடல்




கொழும்பில் உள்ள ஆசிய பசுபிக் இன்ஸ்டிடியூட் ஒப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி (APIIT) நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையேயான மிகப்பெரிய திறமை தேடல்களில் ஒன்றாக டான்டலைஸ் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட உணர்வாக மாறியுள்ளது.

இலுமினேட், பிளேஸ் மற்றும் இலங்கையின் பொழுதுபோக்கு துறையில் குறிப்பிடத்தக்க கலைஞர்கள் போன்ற அற்புதமான இளம் திறமைகளை உருவாக்கும் ஒரு தளமாக இது பல ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்டது. கொரோனா தொற்று காரணமாக 2 வருட இடைவெளிக்குப் பிறகு, டான்டலைஸ் மீண்டும், 12ஆவது ஆண்டில் மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்படும்.

இறுதிச் சுற்றுக்கு அனுப்பப்படும் சிறந்த திறமையாளர்களைத் தேடுவதற்கான ஓடிஷன் சுற்றுகள் ஒக்ரோபர் 8, 15 2022 திகதிகளில் நிறைவடைந்தன. பல்வேறு பிரிவுகளின் இறுதிப் போட்டியாளர்களுக்கான பொழுதுபோக்குத் துறையின் மரியாதைக்குரிய கலைஞர்களிடமிருந்து நிபுணர் பயிற்சி 05 நவம்பர் 2022 அன்று ஒரு பட்டறை மூலம் நிறைவேற்றப்பட்டது.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி நெலும் பொகுண மஹிந்த ராஜபக்ச திரையரங்கில் மாலை 6.30 மணி முதல் இலங்கையின் 8 புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் பாட்டு, நடனம், இசைக்குழுக்கள் மற்றும் வாத்தியக் கருவிகள் என நான்கு பிரிவுகளில் 14 இறுதிப் போட்டியாளர்களுடன் இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது. 1200க்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்க்கும் இலங்கையின் டாடி, நியூஸ்,வஸ்தி மற்றும் தலைசிறந்த கலைஞர்களின் முன்னிலையில் நடத்தப்படும்.

இலங்கை முழுவதிலும் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சரியான நேரத்தில், சரியான முறையில் மற்றும் சிறந்த கவனிப்பை வழங்குவதற்காக லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் இருதய மற்றும் ஆபத்தான சிகிச்சையின் கட்டுமானத்தை விரைவுபடுத்துவதற்காக, நிகழ்வின் அனைத்து நடவடிக்கைகளும் லிட்டில் ஹார்ட்ஸ் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











யாழ். செங்குந்தா பாடசாலையில் மாணவர்களுக்கான மதிய சத்துணவு திட்டத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பிரதாயபூர்வமாக நேற்று ஆரம்பித்து வைத்தார். பழைய மாணவர்களின் நிதியுதவியில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-27)




2021 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றமைக்காக தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை, இடைக்குறிச்சி சிறீசுப்பிரமணிய வித்தியாலயம், கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் கௌரவிக்கப்பட்டுள்ளன. (ம-59)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்திகரமாய் அமைந்த முத்திரைக் கண்காட்சி!

கே.எஸ்.சிவஞானராஜா

கல்வி அழகே அழகு' எனும் மகுடவாசகத்தை உயிராகவும் உயிர்ப்பாகவும் கொண்ட ஒரு கல்விச் சாலையாக கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம் தலைநிமிர்ந்து கலைசிறக்க நிலைகொண்டுள்ளது.

வைரவிழா ஆண்டாக மிளிரும் இவ்வேளையில் சித்திகரமான முத்திரைக் கண்காட்சியும் நாணயக் கண்காட்சியும் சோடை போகாதவாறு இராமகிருஷ்ணா சமூகத்தைக் கொள்ளைகொண்டது. கொலுவாக்கியது.

கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலய அதிபர், பிரதி அதிபர், ஆசிரிய குழாம், மாணவர்கள் யாவரினதும் பூரண ஒத்துழைப்போடு கொக்குவில் தபாலக தபாலதிபர் லெம்பேட்டினதும் கோண்டாவில் உபதபாலக அஞ்சல் அதிபரதும் அந்தந்த தபாலக உத்தியோக ஊழிய சமூகத்தவர்களாலும் முன்னெடுக்கப்பட்ட மேற்படி முத்திரை நாணயக் கண்காட்சி, மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி முத்திரை நாணய சேகரிப்பையும் ஊக்கப்படுத்தியுள்ளது. மேலும் சொல்வதனால், இந்த நிகழ்வு போதையற்ற ஒரு சமூகத்தையும் நேர்த்தியான கீர்த்திமிகு மாணவர்களையும் பேறாக்கவல்ல சாத்தியமான ஒரு சித்திகரமான செயற்றிட்டத்தை கொக்குவில் அஞ்சல் அலுவலகம் கொடியேற்றியுள்ளது.

கொக்குவில் கோண்டாவில் அஞ்சல் குடும்பத்தவர்களோடு யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகரும் கல்விக் கொடையாளரும் காருண்ய சீலருமாகிய இ.குவேந்திர நாதனும் இனிய தமிழ்ப் பேராசிரியை திருமதி மனோன்மணி சண்முகதாஸூம் மேற்படி பாடசாலைஅதிபர், பிரதிஅதிபர், ஆசிரியகுழாம், நலன்விரும்பிகள் சகிதம் கலாபூஷணம் கே.எஸ்.சிவஞானராஜாவும் மேலைத்தேய வாத்தியசகிதம் அழைத்து வரப்பட்டு பிரதான மண்டபத்தில் யாவரும் சங்கமித்தனர். வரவேற்பு நடனமும் பாம்பு நடனமும் சபையை வசீகரித்தது. தொடர்ந்து விருந்தினர்களின் உரையோடு கண்காட்சியானது களைகட்டியது.

1840ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முத்திரையிலிருந்து 2022ஆம் ஆண்டு இன்றுவரை வெளியிடப்பட்ட முத்திரைகள் வரை கணக்கிட முடியாத தொகையில் நேர்த்தியாகப் பரவி வைக்கப்பட்டிருந்தமை மனதுக்கு ரம்மியமாக அமைந்து காணப்பட்டன. உலக வரலாற்றுப் படிமங்களாக முத்திரைகள் காட்சியளித்தன

இவ்வாறான கண்காட்சிகள் வைப்பதன் மூலம் மாணவர்களின் மனப்பாங்கு, செயற்றிறன், படைப்பாற்றல், துணிவாற்றல், தற்றுணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை விருத்தி ஏற்படும்.

கொக்குவில் தபாலக தபாலதிபரோடு கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலய அதிபரும் ஏகமனதோடு ஐக்கியமாகச் செயற்பட்டதன் விளைவாக மனதை விட்டகலா ஒரு வைபவமாக முத்திரைக் கண்காட்சி எழுச்சிபெற்றதெனலாம்.

இன்னுமொரு சிறப்பு யாதெனில் மிகவும் பெறுமதிவாய்ந்த தங்க, வெள்ளி, செப்பு உலோக நாணயங்களும் பெருவாரியான 100 வருட பழமைவாய்ந்த தாள்காசுகளும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ரவி என்பவரால் இணைந்து காட்சிப்படுத்தப்பட்டமை பெரும் வரவேற்பைப் பெற்றது.

கொக்குவில் தபாலகத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி பிரதான தபாலகங்கள் அனைத்தும் இதுபோன்ற முத்திரைக் கண்காட்சிகளை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்றவாறு பாடசாலைகளில் முன்னனுமதியோடு நடத்த ஆவலுறவேண்டும்.



# ஆண்களும் மன அழுத்தமும்

ராணி சீதரன்

உலகம் ஆண், பெண் என்ற இரண்டு இயக்க சக்திகளின் மூலம் உயிர்ப்புறுகின்றது. ஆணுக்குள் ஒரு பெண்ணும், பெண்ணுக்குள் ஓர் ஆணும் மறைந்திருப்பதாகக் கூறுவார்கள். ஆணும் பெண்ணும் தமக்கெனச் சில தனித்துவங்களோடு பிறந்திருந்தாலும் மனிதர் என்ற பொதுமைக்குள் அடங்கிவிடுகின்றனர். ஆண், பெண் என்ற பால்நிலை சார்ந்த பாகுபாட்டுடன் கூடிய சில வரையறைகளைச் சமூகம் வகுத்து வைத்ததோடு நின்றுவிடாது அதனை வழிவழி வந்த மரபாகப் பத்திரப்படுத்திக் கொண்டது. அதன் விளைவால் வீட்டிலும் சரி நாட்டிலும்சரி ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம் போன்ற கோஷங்கள் ஆர்ப்பரித்து எழுந்து ஆட்டிப்படைத்தன. குடும்பத்தில் ஆண்பிள்ளை பிறந்துவிட்டால் போதும், எமது முன்னோர் அதிர்ஷ்டமாகக் கருதி மகிழ்ந்தனர்.

ஆண்பிள்ளையுடன் வீரம், கல்வி, தொழில், சொத்து தலைமைத்துவம் அனைத்தும் சேர்ந்து கொண்டது. அதனால் ஆண் என்பவன் உடல்பலமும், மனபலமும் கொண்டவன் என்ற முள்முடி வலிந்து சூட்டப்பட்டது. அழுகின்ற ஆணை நம்பக் கூடாது என்றார்கள். சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்ற பெருமிதத்தோடு, 'நீ சேற்றில் மிதித்தாலும் தண்ணீரில் கழுவிவிடு. குற்றமில்லை' எனத் தப்புச் செய்வதற்குத் தட்டிக் கொடுத்தார்கள். ஆண்பிள்ளைகளின் மனவளர்ச்சியைவிட உடல் வளர்ச்சியிலே தான் அதிகமான கவனம் எடுக்கப்பட்டது.

### ஆண்களின் மனவழுத்தம் கண்டுகொள்ளப்படவில்லை

ஆண்கள் வன்முறையாளர்கள் எனவும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள், சமூகப் பிரச்சினைகளுக்கு ஆண்கள்தான் காரணமெனவும் கண்டனங்கள் எழுகின்றன. அதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை இனங்கண்டு அவற்றை முளையிலே கிள்ளி எறிவதற்கு ஒவ்வொரு குடும்பமும் முன்வரும்போது இத்தகைய சமூகப் பிரச்சினைகள் எழுவதற்கு இடமில்லை.


அவ்வாறு செய்யாததன் விளைவு ஆண்கள் மனஅழுத்தத்துக்குள்ளாகி தனக்கும் மற்றவர்களுக்கும் உதவாதவர்களாகும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். தொழிலில் அழுத்தம், குடும்பப் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமை, வேலைவாய்ப்பின்மை போன்றவற்றுக்கு முகம்கொடுக்கமுடியாத நிலையில் மனநிம்மதி என்ற பெயரில் போதைக்கு அடிமையாகிறார்கள். 'குடி குடியைக்கெடுக்கும்' என்பது தெரிந்தும் அதிலிருந்து மீண்டெழத் தெரியாது மனைவியையும் பிள்ளைகளையும் நடுத்தெருவில் நிற்கவைக்கும் நிலைக்குள்ளாகின்றனர். இதனால் சீரழிந்த குடும்பங்களின் சோகக்கதைகள் எத்தனை எத்தனையோ! போதைப்பொருள் பாவனையானது பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு வித்திட்டுத் தொடர்கதையாகி விடுகிறது. கொலை, களவு, பாலியல் துஷ்பிரயோகம், குடும்ப வன்முறை என பல்வேறு வடிவம் எடுக்கின்றது.



அவ்வாறு ஓர் ஆண்மகன் உருவானமைக்குக் காரணம் என்ன என்பதை யாராவது கண்டறிய முயன்றதுண்டா? ஆண்பிள்ளை என மகுடம்சூட்டி அழகு பார்த்த பிள்ளையின் மனதை வளப்படுத்தத் தவறியதாலும் அவனின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாததாலுமே இந்த நிலை ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

### மனக்கவலைகளுக்கு மருந்திடல் அவசியம்

'அரிது அரிது மானிடராதல் அரிது' என அரிதாகக் கிடைத்த மனிதப் பிறவியை வாழ்ந்து முடிக்க முடியாது வாழ்க்கையை முடித்துக்கொள்ளத் துணிந்த ஆண்களின் பட்டியல் நீளமானது. உலகில் பெண்களைவிட ஆண்களே அதிகளவில் தற்கொலை செய்கிறார்கள் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதற்குக் காரணம் என்ன? மனச்சோர்வடைந்த நிலையில் பெண்கள் மனக்கவலையைப் பகிர்தலின் மூலம் தீர்வினைப் பெறுகின்றனர். ஆனால் ஆண்கள் தமது பிரச்சினைகளுக்குத் தாமே தீர்வு காண்பதாக நினைத்துத் தமக்குள்ளே அனைத்தையும் புதைத்துக்கொள்வர். 'இதெல்லாம் உனக்கு ஒரு தூசு. நீ ஆண்பிள்ளை தானே' என்ற அடைமொழிகள் அவனைத் தடுக்கும். மனம் கனக்கும். பாவம் ஆண்மகன்கள் சொன்னாலும் வெட்கமடா சொல்லாவிட்டால் துக்கமடா என்ற நிலையில் மன அழுத்தத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும். அம்பலத்துக்கு வராத சங்கதிகளை அலசுவோம் வாருங்கள்.



# 13 மொழிகளில் திருக்குறள்

தமிழர்களின் பாரம்பரிய நூலான திருக்குறள் 13 மொழிகளில் பெயர்க்கப்பட்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

காசி தமிழ் சங்கமம் நிகழ்வின் ஒரு பகுதியாக இந்த வெளியீடு அமைந்துள்ளது.

சமஸ்கிருதம், ஹிந்தி, மராத்தி, ஒடியா, மலையாளம், சவ்ராஷ்டிரி, நரிக் குறவர்களின் வாக்ரிபோலி, படுகு, நேபாளி, அரபி, உருது, பாரசீகம், கெமர் ஆகிய 13 மொழிகளிலேயே இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே 2012ஆம் ஆண்டில் பஞ்சாபி மற்றும் மணிப்புரியிலும் 2014ஆம் ஆண்டில் தெலுங்கு மற்றும் கன்னடத்திலும் 2015ஆம் ஆண்டில் குஜராத்தியிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 - 01 - 1943



இறப்பு 07 - 12 - 2022

## பரம்சோதி சச்சிதானந்தம்

(Proprietor Paransothy Stores, N.M.P. Transport, All Island Agent Maharajah and union Carbide of Srilanka)

யாழ். வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பரம்சோதி சச்சிதானந்தம் அவர்கள் கடந்த (07.12.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரம்சோதி - இராசரட்ணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை செல்லாச்சியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், இளங்கோவன் (லண்டன்), மதிவதனி (லண்டன்), சிறிவதனி (லண்டன்), மலர்வதனி (லண்டன்), நீலவேணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயதேவன், லெஸ்லி, குகதாசன், வேர்ஜினி, சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், அர்ச்சுன், ஆதவன், சிறீதன், தாணியா, சாச்சி, சயந், தனுயந், லக்ஷயா, மதுஷா, அஷ்வினி ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும், தமிழி, சோழன், மையிழி ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், டெபி, சிந்து, அனி ஆகியோரின் அன்புப் பேரனும், கய்லன் அவர்களின் பூட்டனும், இராயலக்ஷ்மி (கனடா), பரமானந்தன் (லண்டன்), அருளானந்தம் (லண்டன்), கலாவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரலிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான கிருஸ்ணதாஸ், பரிமளாதேவி, நல்லையா, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2022) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்.**

**மதி (மகள்) : + 447540065863, சித்திரா (மகள்) : + 447956890026, மலர் (மகள்) : +447908227650, இளங்கோ (மகன்) : + 447970415119**
**வேணி (மகள்) : + 447554990625**

CS 48105)(3/6)

# பெயர் மாற்றம்

இல. 158/1, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **சயிலேசா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **மேரி சயிலேகா** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **மேரி சயிலேகா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 48101)(3/6)

**மேரி சயிலேகா**

# காணி விற்பனைக்கு

STANLEY வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அரை (1/2) பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை.

(CS 48077)(3/6)

**தொடர்பு: 077 645 2487**

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 05 - 1944



இறப்பு 11 - 12 - 2022

## சுப்பையா தம்பிராஜா

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா தம்பிராசா அவர்கள் கடந்த (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவரான கமலாதேவியின் அன்புக் கணவரும், கரிஹரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற யமுனா மற்றும் குமுதா, கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமினி (பிரான்ஸ்), மனோகரலிங்கம், கிருஸ்ணதாசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்திகா, சிந்துயன், சஹானா, யயுஷாந், திலோஷாந், சோபிதன், யசந்தன், கம்சிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அளவெட்டி வடக்கு,**
**அதிரன்புலம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**077 898 2205**

(CS 48091) (3/6)

# விலைமனுவிற்கான அழைப்பு (IFB)
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப் பட்டவாறு கோருகின்றார்.
02. இவ்விலை மனுக்கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. இவ் விலைமனுக் கோரலானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2022.12.14ம் திகதி தொடக்கம் 2022.12.28ம் திகதி வரை மு.ப 09.00 தொடக்கம் பி.ப 1.30 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 2022.12.28 அன்று பி.ப 2.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
06. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| இல | கேள்வி எண் | விபரம் | தேவைப்படும் எண்ணிக்கை | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41 (16)/03/ Sta.Chi/2022 | அப்பியாசக் கொப்பி – 160 பக்கம் முதற்தரமானது | 2410 | கொள்வனவுக் கட்டளை வழங்கி 15 நாட்கள் |
| 02 | | அப்பியாசக் கொப்பி – 120 பக்கம் முதற்தரமானது | 3615 | |
| 03 | | குமிழ்முனைப் பேனா - 0.5 | 2410 | |

**2022. 12. 14**

(CR 38748)(3/6)

**தலைவர்**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்**

# The Palmaram Luxury Suites and Restauran

வேலை வாய்ப்பு

1) சமையலாளர் (Chef) ஆண் / பெண்
2) சுத்தம் செய்பவர் (House Keeping) ஆண்/பெண்
3) உணவு பரிமாறுபவர் (Waiter) ஆண்/பெண்.

**Hotel வேலையில் முன் அனுபவமுள்ளவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

1) தகுந்த சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
2) தங்குமிட வசதி, உணவு வசதி செய்து தரப்படும்.

(CS 21532)(3/6)

**Address : Arampiddy, Manthikai, Point Pedro,**
**T.P : 076 326 3188**

# யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சிற்றுண்டிச் சாலையை ஒரு வருடத்திற்கு (01.01.2023 - 31.12.2023) நடத்துவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவங்கள் 14.12.2022 ஆம் திகதியிலிருந்து வழங்கப்படும். பூரணப்படுத்திய படிவங்களை 31.12.2022 ற்கு முன் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

- ❖ சிற்றுண்டிச்சாலையில் பெண்கள் மட்டும் கடமையில் ஈடுபட முடியும்.
- ❖ கேள்விப்பத்திரங்கள் 03.01.2023 ஆம் திகதி முற்பகல் 8.00 மணிக்கு திறக்கப்படும்
- ❖ மேலதிக விபரங்களை பாடசாலை நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

(CR 38743) (3/6)

**அதிபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 • 04 • 1943



மறைவு 12 • 12 • 2022

## வீரகத்தி பாலசிங்கம் (சின்னத்துரை)

கோண்டாவிலை பிறப்பிடமாகவும், வாகீஸ்வரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட வீரகத்தி பாலசிங்கம் அவர்கள் கடந்த (12.12.2022) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சீனியர் லட்சுமியின் மருமகனும், ஸ்ரீ, சேகர், சாரதா (சாந்தி), சுமதி, மதியழகன், அன்பழகன், பாலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜந்தனின் பெரியப்பாவும், கனகலிங்கம், செல்வராஜா, கனகசபை, நவரட்ணம், பரஸ்ராணி காலஞ்சென்ற நடராஜா, நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுஷானா, திவாகரன், ரஜினி, சிவா, ரஜிதா, காலஞ்சென்ற பாஸ்கரலிங்கம், சுகனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெனிபர், சாரா, சாந்தி, லாவன்யா, கரிஷ், சகானா, மதுஷா, வேணு, திவ்யா, சுஜீ, கௌசி, துவாரகன், கீர்த்திகா, லக்ஷிகா, கிருஷ்ணா, அபிவர்ணன், டிலக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2022) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22232) 1/6

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 15 • 08 • 1952



ஆண்டவன் அடியில் 13 • 12 • 2022

## திருமதி பத்மநாதன் சாந்தினிதேவி

யாழ். வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மநாதன் சாந்தினிதேவி அவர்கள் நேற்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இரத்தினமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அஜெந்தினி (English Teacher Columbuthurai Hindu Maha Vidyalayam), அருந்தினி, அமிழினி, அகிந்தன் (Zonal Printers), அகழ்ஜன் (D.O in District Office - Mullaithevu) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் ரவீந்திர ஸ்ரீஸ்கந்தராஜா, அமரர் மகேந்திரராஜா, அமரர் ஸ்ரீதரன் மற்றும் வினோதினி, மாலினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதாகரன் (Vikna Hotel), மோகன் (Vikna Hotel), ஜெயந்திரன் (Vivehanantha Press), சகானா (Ass.Pharmacist) ரஜிதா (D.O in District Gentral Hospital) ஆகியோரின் அன்பு மாமியாரும், ருக்சிகா, லுகேஸ்காந்த், சேனுகான், கருணியா, பிரதிஸ்வர், அபிராம், அஷ்ஷரா, ஆதனா, கஷ்விந்நாத் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2022) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்று, பின்னர் முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


தொடர்புகளுக்கு:
அகிந்தன் (மகன்) - 0773624224
அகழ்யன் (மகன்) -
மோகன் (மருமகன்) - 0771799253, 021 222 4985

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22230) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 • 09 • 1941



மறைவு 13 • 12 • 2022

## செல்லத்துரை அருளானந்தம்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அருளானந்தம் அவர்கள் நேற்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னரியம் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், பொன்னையா இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், நித்தியானந்தம், (காலஞ்சென்ற) சத்தியானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமணி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், செல்வக்குமார், உதயன், திரவியகுமாரி, குமார், திருக்குமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கீதா, சிறி, சதீஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்தனா, விதுஷன், சங்கீர்த்தன், சர்வா, சானு, யதுஷா, பிரியந்தன், டிலோசன், சுஜிதரன் ஆகியோரின் பேரனும், நிஸ்மிதா, நிவின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மனல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 1041 767
077 9989 589

(CS 22227) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 10 • 1959



மறைவு 10 • 12 • 2022

## திரு.கார்த்திகேசு அம்பிகாபதி

(முன்னாள் முகாமையாளர் - Everyday குடிநீர் விநியோகம்)

காரைநகர் மணற்காட்டை பிறப்பிடமாகவும், பழையகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கார்த்திகேசு அம்பிகாபதி (முன்னாள் முகாமையாளர் - Everyday குடிநீர் விநியோகம்) அவர்கள் கடந்த (10.12.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், சுந்தரலிங்கம் (ஐயாத்துரை - ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)-காலஞ்சென்ற தனலட்சுமி (ஆச்சி) தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயகுமாரியின் அன்புக் கணவரும், லாவண்யா, ரம்யா (உப தபாலதிபர்), சதுர்ஷன் (சவூதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலேஸ்வரனின் அன்பு மாமனாரும், மாலிஷாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சத்தியவதி, புனிதவதி, இலங்காபதி மற்றும் நல்லகுணவதி, தர்மகுணவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருள்நாதன் (கொலண்ட்), விக்கினேஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன், பத்மினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழையகண்டி, காரைநகர்,
077 922 7805

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22222) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 06 . 1941



மறைவு 13 . 12 . 2022

## நடராசா ஆனந்தராசா (வேவி)

**(ஓய்வுநிலை தபாலதிபர்)**

மலேசியாவை பிறப்பிடமாகவும் சித்தங்கேணியை வதிவிடமாகவும் கொண்ட நடராசா ஆனந்தராசா நேற்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-சீதாதேவியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பாக்கியத்தின் அன்பு மருமகனும், சுசீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்லைநாதன் மற்றும் பேரின்ப நாயகி, காலஞ்சென்ற ஆனந்தக்குமாரசாமி மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற சற்குணதேவி மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சியாமளா, ரஷிகலா, ஹம்சலா, லாவன்யா, ஸ்ரீகோணேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோதிபாலன், சிவரூபன், ரமணன், ராஜ்குமார், சுவித்தியா ஆகியோ ரின் அன்பு மாமனாரும், சோஜினி, கஜானன், யாழினி, எழினி, விபூசன், பிரதோஷன், அபரா, அனாகா, நிகேதன், நித்ரா, ஸ்ரீஷா, சுவாரா ஆகியோரின் அன்புப் பேரனும், சுகுமாரன்-பிரேமாவதி, சந்திரவதனா- யோகராசா, விஜய குமாரன் - அன்னபாக்கியம், கோகிலவதனி- ரகுராஜ், இரட்ணகுமாரன்- அம்பிகா, கமலாதேவி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சுசீலா, கமலநாதன் மனோரஞ்சிதம், சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2022) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வட்டு. வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு வீதி, சித்தன்கேணி. 077 333 9752

தகவல்: குடும்பத்தினர்.

(CR 38750) 1/6

# கண்ணீர் அஞ்சலி



**அமரர் சின்னத்தம்பி பஞ்சலிங்கம்**

திரு.சின்னத்தம்பி பஞ்சலிங்கம் அவர்கள் இம் மண்ணுலக வாழ்வை நீத்து அமரத்து வம் அடைந்த செய்தி எம்மை அழுந்துயரில் ஆழ்த்துகிறது. அன்னார் அம்பாளின் தீவிர பக்தனாக இருந்ததோடு திருப்பணிச் சபை உறுப்பினராகவும் இருந்து தொண்டாற்றிய வர். 1963ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபி ஷேகத்தை முன்னின்று நடத்தியவர். அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற ஐந்து கும்பாபி ஷேகங்களையும் கண்டருள் பெற்ற பெருந்தகை. அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆன்மா அம்பாள் பாதத்தில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
அருள்மிகு உரும்பிராய்
பர்வதவர்த்தனி அம்மன் கோயில்.

(CR 38751) 1-6


# வேலைவாய்ப்பு

**கனரக வாகன ஓட்டுனர் ( Driver)**

**பொறுப்புக்கள் (Responsibilities)**

1. யாழ்பாணத்தில் இருந்து மரக்கறி, பழவகைகளை குறிப்பிட்ட வெளி மாவட்ட இடங்களுக்கு குறித்த நேரத்தில் எடுத்து செல்லல்
2. விற்பனை நடைமுறைகளுக்கு விற்பனை பிரதிநிதிக்கு உதவியாக இருத்தல்

**தேவையானவை ( Requirements)**

1. கனரக வாகன சாரதி அட்டை
2. தூர வாகன பிரயாணங்களை செய்யக்கூடியவராகஇருத்தல்
3. சொந்த வாகனத்துடன் இருந்தால் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். குறைந்தது மாதம் 8 பயணங்களுக்கு. ரூ.50,000 க்கு மேல் உத்தரவாதம். மேலதிக பயணங்களுக்கு ஊக்கத்தொகை ( Bonus) வழங்கப்படும்.

**விற்பனை பிரதிநிதி (Sales representative)**

**பொறுப்புக்கள் (Responsibilities)**

1. முழு விற்பனை நடைமுறைகளை் பொறுப்பாக முன்னெடுத்தல்.
2. குறித்த இடத்தில் பொருட்களை பொறுப்பாக ஒப்படைத்தல்.
3. கணக்குகளை கையாளுதல்.

**தேவையானவை ( Requirements)**

1. க.பொ.த உயர்தரம்
2. சகோதர மொழி தெரிந்திருப்பது விரும்பத்தக்கது
3. அனைத்து வேலைகளையும் முன்னின்று சுயமாக செயற்படும திறனுடையவராக இருத்தல்.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். தீர்மானிக்கப்பட்ட இலக்கை விட கூடிய விற்பனைக்கு ஊக்கத் தொகை ( Bonus) வழங்கப்படும்.

**077 480 4990**


# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 04 . 1946



மறைவு 13 . 12 . 2022

## திருமதி தவரஞ்சனி கதர்காமநாதன்

**CRO (Former Customer Relations Officer- Srilanka Telecom)**

வைரவர் கோவிலடி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவரஞ்சனி கதிர்காமநாதன் நேற்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேக்கப் சுந்தரம் தம்பித்துரை குலமணி தம்பதியரின் மூத்த புதல்வி யும், காலஞ்சென்ற செல்லத்தம்பி நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லத்தம்பி கதிர்காமநாதனின் அன்பு மனைவியும், கிறிஸ்ரோபர் குலச்சந்திரன், குலரஞ்சனி, சந்திரகலா ரஞ்சனி, பாலரஞ்சனி, மேரி தயாளரஞ்சனி, தயாளசந்திரன், அற்புதரஞ்சனி, கருணைச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும், அங்கிஸ், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, காலஞ்சென்ற லோகேந் திரராஜா, பூமிநாதன், சுரேந்திரன், மகிந்த, அக்னஸ், பிரபா ஆகியோரின் மைத்துனியும், தவம், ஞானாம்பிகை, அருளானந்தம் ஆகியோரின் மச்சாளும், டில்சான் (அவுஸ்திரேலியா), நிசான் (Director, Access), இஷான் அர்னல்ட் (IT Manager Broad-Pack PVT Limited Colombo), இஷானி அமல்கா (Former IT Quality assurance engineer virtusa PVT Ltd, Colombo), சாகினியா (ICT Teacher, Harcourts International School) ஆகியோரின் மாமியும், ஜீவானந் (இத்தாலி), சாமினி (ஆசிரியர், யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), சர்வானந் (Software Developer in canaccord Genuity, Investment Bank ), அருள்ஞானானந் (பூர்விகா மொபைல்ஸ்), அருள்ராஜ் (கிராம சேவையாளர்), விஜயகலா (டென்மார்க்), சசிகலா, அனந்தபாலன் (World Focus Technology-Colombo), பாலநாதன் (ACORN AVIATION Supervisor), இலங்கநாதன் (Production Assistant RMV), யோகானந் (Incharge AMW Borella Branch), இந்திரா பிரியதர்சினி (Temporary Assistant Lecturer SVIAS Eastern University), கனிசா (கனடா), டிலுக்சி (அமெரிக்கா), ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.12.2022) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் .

077 3422 273

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 19.06.1942

## கணபதிப்பிள்ளை நாகேஸ்வரி

மறைவு 13.12.2022



கலட்டியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நாகேஸ்வரி அவர்கள் நேற்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற வர்களான பாலசுப்பிரமணியம், குணசிங்கம், மகேஸ் வரி, திருஞானசெல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரி யும், பத்மாவதி (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர் - வேலணை), காலஞ்சென்றவர்களான வல்லிநாயகி, குலசிந்தாமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), குலசிங்கம், பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

44/2, மணல்தரை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS 22231) 1-6


தகவல் : குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி பஞ்சலிங்கம்

பிறப்பு 01.12.1926

இறப்பு 12.12.2022



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பி பஞ்ச லிங்கம் அவர்கள் கடந்த (12.12.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், தவலோயினி, தவநேசன், வரலட்சுமி, வரதன், வத்சலா (வனிதா), நிகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2022) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் உரும்பிராய் ஞானவைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உரும்பிராய்.

தகவல்: ப.வரதன் (மகன்)

(CS 22222) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி சேவை

A/C, Fridge, Washing Machine, Air Cooler, Water heater தரமான உதிரிப் பாகங்களுடன் Spot Service

தொடர்பு: 076 034 0301 (CR 38747) (3/6)


## மரண அறிவித்தல்



### பொன்னையா செல்வராசா

பிறப்பு 14.01.1946 இறப்பு 13.12.2022

தபாற்கந்தோர் வீதி, கிராம்புவில், சாவகச்சேரியை சேர்ந்த பொன்னையா செல்வராசா நேற்று (13.12.2022) செவ்வாய்க்கிழமை) Rosil court London இல் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சாந்தகுணதேவியின் அன்புக் கணவரும், கஜேந்திரன், சர்வேந்திரன், கருணேந்திரன், நிஷாந்தினி, யாழினி, ஆகியோரின், பாசமிகு தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் London, Rosil court என்னும் இடத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும், ஏற்றுக் கொள்ளவும்.

074 266 7160
021 227 0976

(CR 38742)(3/6)

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### மங்களபூபதி செந்திவேற்பிள்ளை

வறுத்தலைவிளான் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட மங்களபூபதி செந்திவேற்பிள்ளை அவர்கள் டிசம்பர் 13, 2022 செவ்வாய்க்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம் சென்ற கணபதிபிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலம் சென்ற செந்திவேற்பிள்ளையின் அருமை மனைவியும், கணேசன் (சுவிஸ்), வான்மதி, கலாமதி (USA), ஆகியோரின் அன்புதாயாரும், இரத்னா (சுவிஸ்), விநாயகமூர்த்தி, Dr.ஈஸ்வரன் (USA), ஆகியோரின் மாமியாரும், ஆவார். அன்னாரின் பூதவுடல் டிசம்பர் 14.2022 புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கிரியைகள் நடைபெற்று, 2.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல் – இளையமகள்

## மரண அறிவித்தல்

தோற்றம் 22.03.1943

### ஆறுமுகநாதன் புவநேஸ்வரி

மறைவு 13.12.2022

(இளைப்பாறிய அதிபர் - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகநாதன் புவநேஸ்வரி (இளைப்பாறிய அதிபர் - யா/கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலயம்) அவர்கள் நேற்று (13.12.2022) செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமரர் ஆறுமுகம் கந்தையா (இளைப்பாறிய தபாலதிபர் - கோப்பாய்), தெய்வநாயகி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான அமரர் அப்பாப்பிள்ளை வன்னியசிங்கம், வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், ஆறுமுகநாதன் (இளைப்பாறிய களஞ்சிய மேற்பார்வையாளர் - றெக்கிற் & கோல்மன்ட்) அவர்களின் பாசமிகு துணைவியாரும், இராஜேஸ்வரி, ஆறுமுகம் (ராஜன் - சுவிஸ்), அமரர் பாலசுப்பிரமணியம், அமரர் வீமராஜன், குலராஜன், பாலராஜன் (லண்டன்), ஆனந்தராஜன் (சுவிஸ்), ஜெகராஜா, விக்னேஸ்வரி, விக்னராஜா, தனேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுப்பிரமணியம், சில்வி, பாக்கியநாயகி, இந்திரா, மனோன்மணிதேவி, செந்தில்செல்வி, நிலாணி, மோஹனதாஸ், கிருஷ்ணபவானி, மங்களமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும், நிரஞ்சனா (எச்.என்.பி. - சாவகச்சேரி), சயந்தன் (எச்.என்.பி. – மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும், மயூரன் (பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் அலுவலகம்), சிந்துஜா (மக்கள் வங்கி – பரந்தன்) ஆகியோரின் மாமியாரும், நிஹர்ஷா, கௌடில்யன், சாய்கிரிஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மானிப்பாய் வீதி, கைதடியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2022) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

# சிறுநீரக வர்த்தகம் 10 பேரிடம் வாக்குமூலம்

பொரளை - கொட்டா வீதியிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுநீரக வர்த்தகம் தொடர்பில் இதுவரை 10 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்று கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. தனியார் மருத்துவமனையொன்றில் சிறுநீரகத்தை பணத்துக்காக வழங்குபவர்கள் மற்றும் பெற்றுக்கொள்ளுபவர்களை இணைக்கும் செயற்பாடுகளில் கொழும்பு- 14, கஜீமாவத்தை பகுதியைச் சேர்ந்த 41 வயதான நபரொருவர் ஈடுபட்டு வந்துள்ளார். சிறுநீரகக் கடத்தல் குற்றச்சாட்டில் குறித்தநபர் அண்மையில் கைது செய்யப்பட்டு தற்போது வரைவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மேலும் 10 நபர்களிடம் குற்றத்தடுப்புப் பிரிவால் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த தனியார் மருத்துவமனை நிர்வாகத்திடம் விரைவில் வாக்குமூலமும் பதிவு செய்யப்படவுள்ளது என்று கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை- சிறுநீரக வர்த்தகத்துடன் தமக்குத் தொடர்பில்லை என்று குறித்த தனியார் மருத்துவமனையின் நிர்வாகம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. அத்துடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டபூர்வமான விசாரணைகளுக்காக முழுமையான ஆதரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஒ-14-இ)

# அஞ்சல் அலுவலகத்தில் மீண்டும் கொடுப்பனவு

சாவகச்சேரி, டிசெ.14

கடந்த மூன்று மாதங்களாக சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவு மீண்டும் அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படவுள்ளது.

முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் சிறுவர், மகளிர் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளரால் அஞ்சல் மா அதிபருக்கு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக அஞ்சல் அலுவலகங்களில் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கடந்த செப்ரம்பர் மாதம் தொடக்கம் கொடுப்பனவுகள் அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்படும் என்றும் கொடுப்பனவுகளைப் பெறுவோர் சமுர்த்தி வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்குமாறும், கடந்த ஜூலை மாதம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தந்த மாதங்களில் கொடுப்பனவு வழங்காமல் காலம்தாழ்த்தி கொடுப்பனவு வழங்கப்பட்டது. இதனால் கொடுப்பனவு பெறுவோர் பல சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் கொடுப்பனவு பெறுவோர் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக டிசெம்பர் மாதக் கொடுப்பனவுகள் பிரதேச சமூக சேவைகள் அலகுகள் மூலம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-14-9)

# ஆறுமுகநாவலர் விழா

சாவகச்சேரி, டிசெ. 14

கைதடி சைவ ஐக்கிய சங்கமும் இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி தேவஸ்தானமும் இணைந்து நடத்தும் ஆறுமுக நாவலர் விழா, இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது ஆறுமுகநாவலர் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

கைதடி சைவ ஐக்கிய சங்கத் தலைவர் வ.ஆறுமுகநாதன் தலைமையில் இணுங்கித் தோட்ட கந்தசுவாமி தேவஸ்தான பிரதமகுரு சிவசிறீ யோ.குருசாமிக்குருக்கள் முன்னிலையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் அ.லோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-14-159)

# வர்த்தகர்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 14

காரைநகர் பிரதேசசபையின் நிர்வாகத்திலுள்ள சகல வர்த்தகர்களுடனான 2023 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதி மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையடல், சபையின் சபா மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பிரதேசசபையின் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் காரைநகர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பிரதேசசபையின் செயலாளர், வர்த்தகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-14-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள

# கலாசார மத்திய நிலையங்களை சுவீகரிக்க தெற்கு தீவிர முயற்சி!

யாழ். மாவட்டத்தில்பிரதேசசெயலர்பிரிவுகளில் உள்ள கலாசார மத்திய நிலையங்களைக் கையகப்படுத்துவதற்கு தொல்லியல் திணைக்களம் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்கான கலந்துரையாடல்கள் பிரதேச செயலகங்களில் இடம்பெற்றுவருகின்றன.

இன்று புதன்கிழமை வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் இதற்கான கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது எனத் தெரியவருகின்றது.

நாடு முழுவதுமுள்ள கலாசார மத்திய நிலையங்கள் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவர் இங்கு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போரின் பின்னர் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் ஒன்று என இந்தக் கலாசார மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டன. பிரதேச செயலகங்களுக்கு கீழ் இவை இணைக்கப்பட்டுள்ளன. குறித்த நிலையங்களை அமைக்கும்போது தொல்லியல் திணைக்களமே நிதி ஒதுக்கீடு செய்தது எனக் கூறப்படுகின்றது. அதைக் காரணம்காட்டி அந்த நிலையங்களை சுவீகரிப்பதற்குத் தொல்லியல் திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது தொடர்பாக பிரதேச செயலகங்களுக்குத் தொல்லியல் திணைக்களம் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றது எனவும் தெரியவருகின்றது. இதனால் பிரதேச செயலர்கள் செய்வதறியாத நிலையில் கலாசார மத்திய நிலையங்களை தொல்லியல் திணைக்களத்திடம் கையளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சங்கானையிலுள்ள கலாசார மத்திய நிலையத்தை தொல்லியல் திணைக்களம் சுவீகரிக்க தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே இதற்கான கூட்டம் ஒன்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிலையில் மற்றொரு கூட்டம் நடைபெறவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

கலாசார மத்திய நிலையம் வலி.மேற்கு பிரதேச சபையின் காணிக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றது. காணிக்கான உரித்து பிரதேசசபையிடம் இருக்கின்ற நிலையில், பிரதேசசபையிடம் கட்டட அனுமதி பெறப்படாமல் கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட இந்த நிலையத்தை தொல்லியல் திணைக்களத்திடம் கையளிக்க முடியாது என சபையின் தவிசாளரும் உறுப்பினர்களும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே, தமிழர் பிரதேசங்களிலுள்ள காணிகளையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் தொல்லியல் திணைக்களம் சுவீகரித்து வரும் நிலையில், தற்போது கலாசார மத்திய நிலையங்களையும் சுவீகரிக்க எடுத்துள்ள முயற்சி கடும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. (அ-ஒ-125)

# காரைநகரில் காணி அளவீடு மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காரைநகர், நீலங்காடு பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியை இலங்கை கடற்படை முகாமுக்கு சுவீகரிப்பதற்கான அளவீட்டு முயற்சி மக்களின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டுள்ளது.

காணியை அளவிடுவதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் நேற்றுச் சென்றுள்ளனர். இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

நில அளவைத் திணைக்களத்தினர், மக்களுக்குச் சொந்தமான காணியை கடற்படையினருக்கு அளவிடுவதற்கு அனுமதிக்கமாட்டோம் என்று எழுதி ஒப்பமிடப்பட்ட ஆவணத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிச் சென்றனர். (அ-ஒ-27)

# குளிர் காலநிலையால் அதிக மீன்கள் சிக்கின

தற்போது நிலவும் கடும் குளிர் காலநிலையால் யாழில் மீனவர்களின் வலையில் அதிக எண்ணிக்கையிலான மீன்கள் நேற்றுச் சிக்கின என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாஷையூர், குருநகர், நாவாந்துறை மற்றும் தீவுப்பகுதி ஆகிய கடற்பகுதிகளில் அதிக மீன்கள் வலையில் சிக்கிக்கொண்டன.

ஓரா, ஒட்டி, பாரை, விளைமீன் உள்ளிட்ட பல வகையான மீன்கள் வலையில் சிக்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து அதிகளவில் மீன்கள் சந்தைக்கு வந்ததால் அவற்றின் விலை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இதனால் கூடுதலானோர் அதிகளவில் மீன்களைக் கொள்வனவு செய்தனர் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14-17)

### ஒற்றையாட்சிக்கு...

நல்லிணக்கத்துக்கான விசேட சர்வக்கட்சி கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை 6 மணிக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திகாம்பரம், இராதாகிருஷ்ணன், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் உட்பட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜே.வி.பி. என்பன சர்வக்கட்சி கூட்டத்தை புறக்கணித்திருந்தன.

சுமார் 2 மணிநேரம்வரை நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாகவே விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் ஒரு சில வார்த்தைகளை மாத்திரமே ஜனாதிபதி ரணில் கூறியுள்ளார். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணப்பட்டேயாகவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதிக்குள் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளதால், தற்போது சட்டத்திலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசமைப்பை கொண்டுவருவதில் தாமதம் ஏற்படக்கூடும், ஆனால், தீர்வு பற்றி இணக்கப்பாட்டு ஆவணத்தை வழங்கினால் அது நம்பகமாக இருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்போது உடனடியாக 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலேயே இறுதித் தீர்வு அமையவேண்டும் எனவும் கூட்டமைப்பினர் அழுத்தமாகத் தெரிவித்துள்ளனர். அதையொத்த கருத்தையே சி.வி.விக்னேஸ்வரனும் தெரிவித்துள்ளார்.

அதேபோல காணிப்பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பன உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும் எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

'படையினர், வனவளத் திணைக்களம், மகாவலி அதிகார சபை என்பன ஆக்கிரமித்து வைத்துள்ள மக்களின் காணிகள், சுதந்திர தினத்துக்குள் விடுவிக்கப்படவேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதனை வரவேற்கின்றோம். ஏனையோரும் விடுவிக்கப்படவேண்டும்' எனவும் சம்பந்தன் இடித்துரைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் உடனடியாகக் கோரப்பட்ட தீர்வுகளுக்கு, நிறைவேற்று அதிகாரத்துறையில் இடம்பெறவேண்டிய பொறுப்பு உரிய வகையில் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக இணக்கப்பாடொன்றுக்கு வருமாறு கட்சிகளுக்கு ஆலோசனை வழங்கிய அவர், சுதந்திர தினத்துக்கு முன்னர் அது நடக்க வேண்டும் எனவும், அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் அறிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு அமைச்சர் ஹாபீஸ் நஷீர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அடுத்த சுற்றுப் பேச்சை ஜனவரி முற்பகுதியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என சந்திப்பில் பங்கேற்ற அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டார். (அ-ஒ-5-22-44)

### காணாமல்...

மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடுந்தொனியில் வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வகட்சிக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விவகாரத்தைப் பற்றி கருத்துத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

'அவர்களைக் கொன்றுவிட்டீர்கள். தற்போது நாடகமாடவேண்டியதில்லை. எனவே, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கு நீதி வழங்கப்படவேண்டும். அதனை உடனடியாகச் செய்யலாம்' என்று காட்டமாக சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-5)

### நடனத்துறை...

உள்ளவர்களை உள்வாங்குவதற்கான தெரிவுப் பரீட்சைகள் அந்தந்தப் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படுவது வழமையாகும். அவ்வாறு யாழ். பல்கலைக்கழக நடனத் துறையால் நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையிலேயே முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகப் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2022 - 2023 ஆம் கல்வி ஆண்டுக்கான வெட்டுப்புள்ளிகள் வெளிவந்துள்ள நிலையில், திறமையான பல மாணவர்கள் நுண்கலை நடனத்துறை அனுமதியில் தெரிவுசெய்யப்படாமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; நுண்கலைப் பாடங்களுக்கான தெரிவு அந்தந்தப் பல்கலைக்கழகங்களால் நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சைகளின் அடிப்படையில், மாணவர்கள் பெற்ற 'இசற் ஸ்கோர்' புள்ளி ஒழுங்கில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகங்களின் தெரிவு என்பது மாணவர்கள் குறித்த பாடத்தில் வெளிப்படுத்திய அடைவு மட்டங்களின் அடிப்படையில் அமையும் என்றும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேவைப்பாட்டின் அடிப்படையில், தேசிய ரீதியிலான சாதனைகள் பெற்ற மற்றும் பிரபல பாடசாலைகளின் ஆசிரியர்களிடம் பயின்ற பல மாணவர்கள் வேண்டுமென்றே பழிவாங்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி வழங்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரிடமும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடுகள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சுண்ணாம்புக்கல் அகழ்வு; 3 சந்தேகநபர்கள் கைது!



யாழ்ப்பாணம், டிசெ. 14

வயவிளான் - குட்டியப்புலம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண் ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய புலனாய்வு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவ டிக்கை இடம்பெற் றது. இதன்போது குறித்த அகழ் வுக்கு பயன்படுத் திய உழவியந்தி ரங்களும் கைப் பற்றப்பட்டன என பொலிஸார் தெரி வித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் உழவியந்திரங் களுடன் அச்சு வேலி பொலிஸ் நிலையத்தில் ஒப் படைக்கப்பட்டனர். சந்தேகநபர்களை சட்டநடவடிக் கைக்கு உட்படுத்த அச்சுவேலி பொலி ஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ச-27)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

**TECHNO WORLD**

தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்பப்பிரிவு

A/L 2022 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

**விசேட செயலமர்வு**

18, 19, 20 December 2022
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
21, 22, 23,24 December 2022
பொறியியல் தொழில்நுட்பவியல், உயிர் முறைகள் தொழில்நுட்பவியல்
26, 27, 28 December 2022
ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம், ஊடகக்கல்வி

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவு

வெலிங்டன் சந்தி,
லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
077 017 5346

## மரண அறிவித்தல்



தோற்றம்
23 - 02 - 1951

மறைவு
13 - 12 - 2022

### திருமதி அரியமலர் கிருஷ்ணமூர்த்தி

பழைய தபாற்கந்தோர் வீதி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியமலர் கிருஷ்ணமூர்த்தி 13.12.2022 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் அரியகுட்டி பாக்கியம் ஆகியோரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் பாக்கியம் ஆகியோரின் பாசமிகு மருமகளும், கிருஷ்ணமூர்த்தியின் அன்புத் துணைவியும், அகிலன், கோகுலன், அகல்யா ஆகியோரின் ஆருயிர்த் தாயாரும், ஸ்ரீஸ்கந்தராசாவின் அன்புச் சகோதரியும், அனுசியா, ரமணன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஸேஷாந், ஐஸ்வர்யா, கர்ணியா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நகுலேஸ்வரி, சிவயோகமலர், சிவலிங்கநாதன், ரங்கநாதன் காலஞ்சென்ற சிவனேசமலர் மற்றும் ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் : 077 658 9752
மருமகன் : 077 574 8095

(CS 48091) (3/6)

தகவல்
குடும்பத்தினர்

**வேலையாள்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல புடைவை அகத்திற்கு வேலையாள்கள் தேவை. கணினி அறிவுள்ளவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 260 4233

**புதன் 2:1 இலவசம்**

அப்பம், கோழிபுக்கை, நாசி

யாழ்பாடி விடுதி / உணவகம்
51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
+9421 222 6868, +9477 734 0026

**வேலை ஆள்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் (Bill) கிளாக் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 748 8093 (CR 38740) (3/6)

**பெயர் மாற்றம்**

தெணிப்பிள்ளையார் கோவில் வீதி, 2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை எனும் முகவரியில் வசிக்கும் **கணேசலிங்கம் அருண்** என்கின்ற எனது பெயரினை இன்று முதல் **கணேசலிங்கம் அருள்** என மாற்றிக்கொள்வதோடு இன்று முதல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடு வேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக அறியத்தருகின்றேன்.

க.அருள்

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 33 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 185 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்) தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில் 96 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

- **A32** பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- **A32** பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச் சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம்
077 8147 389
077 9865 457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.